| O.S.No. 180/2023 | DW1: திரு. சிவசுப்பிரமணிய பிள்ளை<br>த/பெ. திரு. அய்யம்பெருமாள் பிள்ளை | 25-07-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. தாவா சொத்தை வாதிகள், பிரதிவாதிகள் மற்றும் ஒரு முனுசாமி ஆகியோர் சேர்ந்து கூட்டாக வாங்கினோம் என்றால் சரிதான். சொத்து வாங்கிய பிறகு முனுசாமியின் பாகத்தினை 2020–ம் ஆண்டு நான் கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்றது வாதிகளுக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் தெரியும், அதைப்பொறுத்து யாரும் ஆட்சேபனை செய்யவில்லை. தாவா சொத்தினை தனிப்பட்ட முறையில் உபயோகத்திற்காகத்தான் அனைவரும் வாங்கினோம், விற்பனை செய்வதற்காக வாங்கவில்லை. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை.

2. 1–ம் வாதி அவருக்குரிய பாகத்தை பிரித்து தரும்படிக்கு அனைவருக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பிற்கு பிறகு சொத்தினை பிரித்து கொடுக்கவில்லை. 16.03.2023 அன்று வாதிகள் இருவரும் எனக்கு வழக்கு சொத்து சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரிதான். ஏன் அதற்கு பிறகு சொத்தினை வாதிகளுக்கு பிரித்து கொடுக்கவில்லை என்றால் 2ம் பிரதிவாதி, 2, 7, 8 பிரதிவாதிகள் ஒத்துவராததால் பிரித்து கொடுக்க முடியவில்லை. நான், துரை, ரங்கநாதன், வேலு, சத்யா ஆகியோர் வழக்கு சொத்துக்களை வாதிகளுக்கு பிரித்து கொடுக்க தயாராக உள்ளோம்.

3. வழக்கில் வாதிகள் கோரியபடி பரிகாரத்தினை வழங்க எங்களுக்கு எந்த ஆடசேபணையும் இல்லை, அதேபோல் எங்களுக்குரிய பாகத்தை பிரித்து கொடுக்கும்படி இந்நீதிமன்றத்தை வேண்டி பிராத்திக்கிறேன். 2, 7, 8 பிரதிவாதிகள் பாகத்தினை பிரித்து தராததால்தான் வழக்கு போட்டுள்ளார்கள். நாங்களும் பாகப்பிரிவினைக்கு உடன்படாததால்தான் வாதிகள் வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான்.

<u>2, 7, 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. நான், 3 முதல் 6 பிரதிவாதிகள் ஒரே வழக்கறிஞரை வைத்துதான் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்காடி வருகிறோம் என்றால் சரிதான். DTCP Approval வாங்கினால் அதிக செலலாகும் என்பதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை, சரியல்ல. மனைப்பிரிவுகளாக பிரித்துக்கொள்வதற்காகத்தான் நாங்கள் சொத்தினை வாங்கினோம் என்றால் இல்லை, நிலங்காளக பிரித்துகொள்ளலாம் என்றுதான் வாங்கினோம். 11 பங்குதாரர்களில் ஒருவரின் பங்கினை நான் கிரையம் வாங்கிவிட்டேன். தாவா சொத்தில் எனக்கு 2 பாகம் உள்ளது.

2. நிலங்களாக பிரித்துக்கொள்ளலாம் என்றுதான் வழக்கு சொத்தினை கிரையம் வாங்கினோம் என்று வழக்கிற்காக அப்பட்டமாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தினை சமன்படுத்தி நிலங்களாக பிரித்துக்கொள்ளலாம் என்றுதான் இருந்தோம், ஆனால் அதற்குள் பிரச்சனை ஏற்பட்டதால் சமன்படுத்த முடியவில்லை. வழக்கு சொத்து மனைப்பிரிவுகளாக தயார் செய்து பிரித்துக்கொள்ளலாம் என்றுதான் கிரையம் வாங்கப்பட்டது என்றாலும், அதற்கு 2, 7, 8 பிரதிவாதிகளைத் தவிர மற்ற யாரும் நாங்கள் உடன்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை நாங்கள் வெளிநபர்கள் யாருக்கும் விற்பனை செய்ய முயற்சி செய்யவில்லை.

3. வழக்கு சொத்திற்கு பக்கத்தில் மனைப்பிரிவுகளாக உள்ளது என்றால் ஒரு சில இடங்கள் மனைப்பிரிவுகளாக உள்ளது, ஒரு சில இடங்கள் பயிர் வைக்கும் இடங்களாக உள்ளது. வழக்கு சொத்து நஞ்சையாக புஞ்சையாக என்று எனக்கு தெரியாது. நஞ்சை நிலத்தை மனைப்பிரிவுகாளக மாற்ற முடியாது என்ற விஷயம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்து மொத்தம் 92 சென்ட் ஆகும். அதனை 11 பங்குகளாக பிரித்தால் ஒவ்வொருவருக்கும் தலா 8¼ சென்ட் பாகம் வரும்.

4. அனைத்து பாகஸ்தர்களும் தாவா சொத்துக்களை தனித்தனியாக அனுபவிக்க வேண்டும் என்றால் 30 அடி பிரதான சாலை இருந்தால்தான் அனுபவிக்க முடியும் என்றால் சரியல்ல. அவ்வாறு இருந்தால்தான் அங்கீகாரம் கிடைக்கும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 30 அடி சாலை இருந்தால்தான் அனுபவிக்க முடியும் என்று 2, 7, 8 பிரதிவாதிகள் எங்களிடம் கேட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு சாலை அமைத்தால் செலவாகிவிடும் என்று பயந்துகொண்டு நீதிமன்றத்தை நாடியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

5. மேற்படி விஷயங்களை மறைத்து நாங்கள் வாதிகளுடன் சேர்ந்து கூட்டாக மோசடி செய்யும் எண்ணத்தில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை மனைப்பிரிவுகளாக பிரித்து அங்கீகாரம் பெற்ற மனைகளாக விதிமுறைகள் படி பிரித்துக்கொள்வதற்கு 2, 7, 8 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.07.25 16:33:29 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**